

சுபமஸ்து.


# தமிழகம்.

வால்யூம் 1 | 1905௵ நவம்பர்௴ | நம்பர் 11.


## சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம்.

### முயற்சி.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்," என்னும் நீதி வாக்கியம் நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். உலகத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் முயற்சி அவசியம் என்பது "முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்," என்னும் திருக்குறளினால் தெரியவருகிறது. ஒருவன் முயற்சி உள்ளவனாய் இருந்தால் சகல பாக்கியமும் உள்ளவனாயிருப்பான்; முயற்சி இல்லாவிட்டால் தரித்திரனாகி அந்த முயற்சியே இல்லாதவனாயும் போய்விடுவான். அந்த முயற்சியானது நன் முயற்சி, தீயமுயற்சி என்று இரண்டு வகைப்படும். நன் முயற்சியானது கல்விமுயர்சி, தொழில்முயற்சி பக்திமுயற்சி என்று பலவகைப்படும்.

கல்வி முயற்சியாவது ஒரு படிப்பை விடாமல் ஆவலோடு மேலும் மேலும் கற்பது தான். "கறக்கச்சுரக்கும் ஆவின்பால்,

கற்கச்சுரக்கும் பேர் அறிவு,'' என்னும் வாக்கியத்தின்படி நாம் கற்கக்கற்க நம்முடைய அறிவு விர்த்தியாகிக் கொண்டே வருகிறது. பாலகர் வகுப்பு தேறவேண்டுமானால் அரிச்சுவடி முழுவதும் படித்து முடிக்கவேண்டுமல்லவா? அரிச்சுவடி படிக்காத பிள்ளை எப்படி முதல் வகுப்பிற்குப்போகக்கூடும்? அ படிக்காத பிள்ளை ஆ எப்படிப்படிக்கக்கூடும்? ஒவ்வொரு எழுத்தும் முயற்சியோடு படிக்கவேண்டும். "இளமையில் கல்" என்று ஔவையார் சொல்லியிருக்கிறபடியால் சிறுவர்களெல்லாம் சிறுவயதிலேயே முயற்சியாய்ப் படிக்கவேண்டும்.

தொழில் முயற்சி ஒரு வேலை எடுத்தோமானால் என்ன கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டபோதிலும் தைரியத்தோடு செய்தே முடிப்பதாம். இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு குயவனை எடுத்துக்கொள்வோம். ஒரு குடம் செய்யவேண்டுமானால் எவ்வளவு தூரம் பாடுபடவேண்டியது இருக்கிறது. குளத்திற்குப்போய் மண்ணெடுத்துப் பக்குவமாய்ச் சேறு குழைத்து கல் கட்டிகளை எல்லாம் பொருக்கிவிட்டுச் சக்கரத்தில் வைத்து வனைகிறான். அப்படி வனைந்துகொண்டு இருக்கும்போது ஒரு பொடிக்கல்லு இருந்து அந்தக் குடத்தை உடைத்து விடுகிறது. திரும்பவும் கஷ்டத்தோடு வனைந்து வெயிலில் காய வைக்கிறான். அப்பொழுது அது உடைந்துபோனாலும் போகும். பின்பு சூளை வைத்துச் சுட்டு அதிகமாய் வெந்து போகாதபடி பக்குவமாய் வேகவைத்து எடுத்து விற்கிறான். ஒரு குடம் வருமுன் இவ்வளவுதூரம் முயற்சி பண்ணவேண்டியதிருக்கிறது. கடவுளும் நாம்முயற்சி செய்தால்தான் அவரும் உதவி செய்கிறார் என்று ஒரு பழமொழி இருக்கிறது. இந்தப் பழமொழி வந்ததற்கு ஒரு கதை உண்டு! அதாவது:—

ஒருவன் தன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். போகும்போது அந்த வண்டி சேற்றில் அகப்பட்டுக்கொண்டது. அப்போது கடவுளை நோக்கிக் கூப்பிட்டான். அப்பொழுது கடவுள் அவனுக்குத்தோன்றி, "உன்தோளைப்

பைதாவுக்குள் கொடுத்து வண்டியைத் தள்ளு. அப்புறம் நான் உனக்கு உதவி செய்கிறேன்,'' என்று சொன்னார். அப்படியே அவன் தன் தோளைப் பைதாவிற்குள் கொடுத்துத் தள்ளினான். உடனே வண்டி வெளியே வந்துவிட்டது என்று கிரேக்கருக்குள் சொல்லப்படுகிறது. இதனால் நாமே நம்முடைய தொழில்களில் நல்லமுயற்சி எடுக்கவேண்டுமென்று நாம் அறிகிறோம்!

ஒவ்வொரு தொழிலிலும் முயற்சி அவசியம். ஒருவன் சம்ஸாரியாய் இருந்தால் தன்னுடைய வேலையிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். குமாஸ்தாவாயிருந்தால் அதிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். நியாயாதிபதியாய் இருந்தால் அதிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். நாம் பார்க்கும் பெரிய மனிதர்களெல்லாம் தங்களுடைய முயற்சியினாலேயே பெரியவர்களாகியிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். "முயற்சி உடையோர் இகழ்ச்சிஅடையார்'', என்றபடி ஒருவன் ஒருசிறிய காரியத்தில் முயற்சி பண்ணினாலுங்கூட பலன் அடையாமல் போகிறதில்லை. ஒரு சிறிய தானிய மணியை விதைத்தால் கொஞ்சங் குறைய முன்னூறு தானியம் கொடுக்கிறது. அதையும் விதைத்தால் எவ்வளவோ தானியம் கிடைக்கும். ஒரு சிறிய மாங்கொட்டையை எடுத்து ஒரு சின்னப்பள்ளம்தோண்டி அதில் போட்டு மூடிக் கொஞ்ச நாளைக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு வந்தால், நமக்கு அது பூவாகவும் வடுவாகவும் காய்களாகவும் பழங்களாகவும் விறகாகவும் இன்னும் எத்தனையோ விதமாகவும் உபயோகப்படுகிறது. இதெல்லாம் அற்ப முயற்சியினால் விளைந்த பலன் அல்லவா?

இப்படியே எந்த நல்ல தொழில் முயற்சி எடுத்தாலும் பயனில்லாமல் போகாது. அவைகளெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல இடமில்லை.

இன்னும் ஒருவகை முயற்சி உண்டு. அதாவது பக்தி முயற்சி. பக்திமுயற்சி என்றால், நான் யாரென்றும் என்னை உண்டாக்கினவர் யாரென்றும் என்னை என் உண்டாக்கினார்

என்றும் அவருடைய சித்தம் இன்னதென்றும் அறிந்து, ஆத்துமாவுக்கு அடுத்த காரியங்களில் முயற்சி பண்ணுவதாம்! ஒருவனுக்கு எவ்வளவுதூரம் கல்விமுயற்சியும் தொழில்முயற்சியும் இருந்தபோதிலும் பக்திமுயற்சி இல்லாவிட்டால் ஒன்றிற்கும் பிரயோஜனப்படமாட்டான்.

பக்திமுயற்சியானது ஒருவனை நல்லவழிகளில் நடத்துகிறது. மற்றவர்களுக்கு நன்மைசெய்யும்படி ஏவுகிறது. எல்லாரோடும் அன்பாய் இருக்கச் செய்கிறது. அதாவது வேதம் முழுவதையும் நிறைவேற்றும்படி செய்கிறது. கடைசியாகப் பக்திமுயற்சியானது முத்திவுலகில் சேர்க்கிறது.

பக்தி முயற்சியானது நடக்கையிலே காண்பிக்கப்பட வேண்டும். ஜெபம் பண்ணுகிறதினாலாவது அல்லது தவம் செய்வதினாலாவது உண்டாகாது. கிரியையினாலேயே உண்டாகும்.

இதுவரைக்கும் நன் முயற்சியைப்பற்றிப் பார்த்தோம். இனி தீயமுயற்சியைப்பற்றிப் பார்ப்போம். தீய முயற்சியாவது தனக்காவது பிறருக்காவது கெடுதி உண்டாக்கும் விஷயங்களில் முயற்சியாய் இருப்பதுதான். நன்முயற்சியானது எவ்வளவோ நன்மையைத்தருகிறது. அவ்வளவு தூரம் தீயமுயற்சி தீமையை உண்டாக்குகிறது.

இதற்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன். அரங்கன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் பத்தடி நீளமுள்ள ஒரு குழியைத் தாண்டப் பிரயாசப்பட்டான். முதலில் தவறி விழுந்துவிட்டான். இரண்டாம் தடவையும் பிரயாசப்பட்டுக் கால்சுளிக்கி விழுந்துவிட்டான். மூன்றும் தடவையும் பிரயாசப்பட்டதில் கால் ஒடிந்து குழிக்குள் விழுந்துவிட்டான். இக்கதையினால் தீயமுயற்சி செய்தவன் பலன் நன்றாய் விளங்குகிறதல்லவா? "நன்மைக் கடைப்பிடி" என்று பெரியோர் சொல்லி இருக்கிறபடியால், நாம் தீயமுயற்சியை விட்டு விட்டு நன்மையான காரியங்களில் முயற்சியாய் இருக்க வேண்டும்,

நன் முயற்சியானது குணங்களில் ஒன்று. பரமசிவனது முயற்சியைப்பற்றி ஒரு கதையுண்டு! ஒரு நாள் பார்வதி அம்மாள் பரமசிவனது முயற்சியைப் பரிட்சை பார்க்கவேண்டுமென்று ஒரு சிமிழில் ஒரு எறும்பைப்பிடித்து விட்டு நன்றாய் அடைத்துவிட்டுப் பத்திரமாய் வைத்திருந்தார்கள். பரமசிவன் எல்லாப்பிராணிக்கும் படியளந்துவிட்டு வந்தார். அந்த அம்மாள், "எல்லாப்பிராணிக்கும் படி அளந்துவிட்டீரா?" என்று கேட்டார்கள். அவர் ஆம் என்று மறுமொழி சொன்னர். உடனே அந்த அம்மாள் அந்தச் சிமிழைத்திறந்து பார்த்தார்கள். அப்பொழுது அந்த எறும்பு தீனியை வாயில் கவ்விக்கொண்டு இருந்தது. பரமசிவன் எல்லாருக்கும் படி அளக்கிறதாய் இருந்தால் அவர் எவ்வளவு முயற்சியாய் இருக்கிறர்?

முயற்சியானது தேவனுடைய குணங்களில் ஒன்றாய் இருந்தால், நாம் எல்லாரும் எல்லா நல்ல காரியங்களிலும் முயற்சியாயிருக்கவேண்டும்.

கருணாநிதி இல்லத்து மரகதவல்லி அம்மாள்.

---

# *பதினேன்பதா நூற்றுண்டில் தமிழின் நிலைமை.

வடவேங்கடந் தேன்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்.......................

எனத் தொல்காப்பியப் பாயிரத்திற் கூறிய எல்லையையும்

மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்............

என நன்னூற் பாயிரத்திற் கூறிய எல்லையையும் கடந்து பல திசைகளிலும் பரவி நான்குவருஷத்திற்கு முன்னே எடுத்த

* சென்னை இராஜதானிக் கலாசாலைத் தமிழ் மாணவர் சங்கத்தில் நச்சினர்க்கினியார் படித்த ஓர் வியாசம். [பத்திராசிரியர்]

கணக்கின்படி தென்னிந்தியாவில் ஒருகோடியே ஐம்பத்தைந்து லக்ஷத்து நாற்பத்து மூவாயிரத்து முன்னூற்றெண்பத்து மூவ ராலும், ப்ரெஞ்சு மாகாணங்களில் இலட்சத் தறுபதாயிரவரா லும், ஈழ மண்டலத்தில் சுமார் எட்டுலக்ஷம் பேராலும், மற்று விடங்களில் வசிக்குந் தமிழராலும் வழங்கப்பெறும் தமிழ்ப் பாஷை சென்ற நூற்றாண்டில் எந்நிலை பெற்றுலாயதென்ப தைக் காண்பதே இப்பொழுது ஆராயப்புகுந்த விஷயமாம்.

சென்ற நூற்றாண்டுக்குமுன் தமிழ் இருந்த நிலை இன்ன தென்றறிந்தால் மாத்திரமே, சென்ற நூற்றாண்டில் தமிழ் விருத்தியடைந்ததா, க்ஷீணமடைந்ததா என்பதைத் தெள்ளிதி னுணரலாம். தமிழின் தொன்மையைப்பற்றிப் பேசப் பொழு தில்லை. அது என்னாலாவது மன்று. தமிழிலக்கியத்தில் முக்கிய மானவைகளெல்லாம் நெடுநாட்கு முன்னமே ஏற்பட்டு விட் டன. இடையில் ஏற்பட்டவை பெரும்பாலும் மொழிபெயர்க் கப்பட்டனவேயாம். இவைகள் 18-ம் நூற்றாண்டு வரையில் ஏட்டுப்பிரதிகளாகவே யிருந்தன.

வித்தியா விரோதிகளான சிலர் புஸ்தகங்களைத் தொகுப்ப தும் அவைகளைப் படிப்பதும் உண்டு. ஆயினும் அவற்றால் பயனெய்துவோர் சிலரே. இப்படிப்பட்ட புத்தகங்கள் 19-ம் நூற்றாண்டில் முதலில் ஒரு பாலும் பிற்பாகத்தில் பெரும்பாலு மாக அச்சேறின. இவைகளைப் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டவர்கள்

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு (நாலடியார்)

என்றபடி புத்தகங்களைப் போற்றும் புலவரையும் தேற்றும் புலவரையும் பெருக்கிவிட்டனர். அவர்கள் செய்ததும் "கைம் மாறு வேண்டாக் கடப்பாடே". இதனால் நாம் பெற்றதும் பெரும் பேறே. வேறு தேய மன்னரின் அரசாக்ஷி காலங்க ளில் பல காரணங்களால் அழிந்துபோனவை போக எஞ்சினின்

றவைகளில் அச்சாய் விட்டதைத் தவிர மற்றவைகளைப் பரிபா
லித்து வருவதும் அச்சிட்டு வருவதும் 20-ம் நூற்றாண்டில்
வசிக்கும் புலவரைப் பொறுத்த கடன்.

அனேக காலமாக இயலிசை நாடகமென்னும் மூவகைத்
தமிழ் வழங்கி வந்ததற்கு இறந்துபோன அகத்தியமும் இசை
நுணுக்கமும் எஞ்சியிருக்கும் சிலப்பதிகாரமும் சிந்தாமணி
யும் சாக்ஷியாம். இவற்றில் இசைத்தமிழும் நாடகத்தமிழும்
கடைச்சங்கத்தார் காலம் வரையில் பயில வழங்கிப் பின் நாள
டைவில் மறைதலாயின. ஆகவே, இயற்றமிழ் மாத்திரமே
சென்ற ஆயிரத்துச் சில்லரை வருடங்களாக வழங்கிவருகின்
றது. சென்ற நூற்றாண்டுக்கு முன் தமிழில் யாத்தநூல்கள்
ஏறக்குறைய முழுவதும் அறம், பொருள், இன்பம், வீடெனும்
புருடார்த்தங்கள் நான்கையேனும் நான்கி லொன்றையேனும்
பற்றியே கூறுவதாகின்றன. இலக்கண நூல்களும் சோதிட
சாஸ்திரங்களும் வெகு சிலவேயாம். 19-ம் நூற்றாண்டுக்கு
முன்னரே பழைய நூல்களுக்கு உரைகள் ஏற்பட்டு விட்டன.
19-ம் நூற்றாண்டின் பிற்பாகத்தில் தற்காலத்து மாணக்கருக்
கேற்றபடி பதவுரை குறிப்புரை முதலானவைகளை எழுதி அச்
சடிக்கும் வழக்கமுண்டாயிற்று.

எழுது கருவி காகிதம் முதலானவைகள் இல்லாத காலங்க
ளில் சுலபமாக நினைவில் வைக்கும்படி நூல்களெல்லாவற்றையும்
பாக்களாலேயே ஆக்கினர். பிறகு ஏட்டுச்சுவடி உபயோகிக்
கிற காலத்தும் சிறிது உரைகள் எழுதிவந்தனர். 19-ம் நூற்
றாண்டினிறுதியிலும், தற்காலத்தும் சிலர் வசன நூல்களை எழு
தாது செய்யுளியைப்பதே கருத்தாக விருப்பது விசனகர
மான காரியம். சிட்டிக்கைப் பொடிக்கும் சீட்டுக் கவிபாடும்
இந்நாட்டில் வசன நூல்களைப்பற்றிக் கவனியாதிருந்தனர்
போலும். வசன நூல்கள் எழுதுவது கைகூடும் காரியமென்
றும், தற்காலத்தில் தமிழையுந் தமிழரையும் விருத்திசெய்யக்
கூடியன வசனநூல்களே யென்றும், வசனநூல்கள் இல்லா
திருந்த காலத்தில் தமிழுந் தமிழரும் பெரிதும் இடர்ப்பட்ட

னரென்றும் உணர்ந்தவரே தமிழில் வசன நூல்களை எழுதத் துணிந்தனர். இவைகளில், தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்ச தந்திரமும், மாயுரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளையவர்கள் எழுதிய வசன நூல்களையும், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் எழுதியவசனநூல்களும், வீராசாமி செட்டியாரவர்கள் எழுதிய விநோதரசமஞ்சரியும், ஜீவதசையாயிருப்பவர்களில் சிலருடைய வசன நூல்களுமே வசன நடைக்கு எடுத்துக் காட்டாயிருக்கின்றன. இப்பொழுது எழுதிக் கொண்டிருப்பவரும், இனி எழுதத் துணிபவரும் நல்ல வசன நூல்களை எழுதித் தமிழ்நாட்டுக்குப் பேருதவி புரிவார்.

பதினெண்பதாம் நூற்றாண்டிறுதியில் ஆங்கிலமுந் தமிழுங் கற்ற வித்துவான்கள் வடநூல் நாடகங்களையும், மேல்நாட்டு நாடகங்களையுமே ஒட்டித் தமிழில் நாடகங்கள் இயற்றினர். இதற்குச் சிலகால முன்னர் பாரதத்தினின்றும் இராமாயணத்தினின்றும் எடுத்தாளக்கூடிய பாகங்களையெல்லாம் அங்கம், களம் முதலிய நாடகப்பிரிவுகளின்றியே நாடகங்களைப் புலவர்கள் இயற்றினர். இப்பொழுதிருக்கும் நோக்கத்தைப்பார்த்தால் இவ்விருபதாம் நூற்றாண்டில் நாடகத்தமிழ் அபிவிர்த்தியடைய அனேகர் ஊக்கங்கொள்வாரென்று தோன்றுகின்றது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழபிவிர்த்திக்காகச் சில மார்க்கங்களேற்பட்டன. அவை தினவர்த்தமானப் பத்திரிகைகளும், மாதாந்தரப் பத்திரிகைகளுமாம். பல பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. இப்போது யாவர்க்கும் பயன்படுவனவாயும், தமிழின் அபிவிருத்தியையே நோக்கியனவாயுமுள்ள பத்திரிகைகள் மிகச் சிலவேயாம். நன்கு நடத்துபவரின்மையால் இறந்தன தவிர மற்றவை இறந்தமைக்குத் தமிழரிடத்தில் பாஷாபிமானம் இல்லாமை காரணமேயோ? இந்தியாவின் விஸ்தீரணத்தில் பத்திலொருபங்காகும் அங்கிலேய நாட்டில் மூவாயிரம் பத்திரிகைகளிருந்தபோதிலும் ஒவ்வொன்றுக்கும் வருஷ வருமானம் சராசரி 1000 பவுனிலிருந்து 2500 பவுனென்றால் இவற்றிற்குக் கைபொப்பக்காரதிகமென்பது

கூறுதமையும். இந்தியா முழுமைக்கும் மூந்நூறு பத்திரிகைகள் தாமுமில்லையென்று சென்ற நூற்றாண்டிறுதியில் கணக்கிட்டார்கள். அப்படி மூந்நூறினுங் குறைந்த பத்திரிகைகளில் தமிழ்ப்பத்திரிகைகள் எத்தனையோ?

முற்காலத்தில் கல்விச்சாலைகளில் சிறுவர் தமிழ்கற்றதைப் பற்றிச் சிறிதாராய்வோம். அக்காலத்தில் நாம் கூடும் சாலைகளைப்போல் பாடசாலைகள் கிடையா. வீட்டுத் திண்ணைகளும் ஒரே இடத்தில் பெரிய மரங்களின் நிழலுமே பாடசாலைகளா யிருந்தன. அப்போது தமிழ் தங்கியவிடம் பனையோலையே. அப்பிள்ளைகள் கற்றதெல்லாம் தமிழுங் கணிதமுமாம். நன்னெறியூட்டுவதான நூல்களின் மூலபாடங்களை நெட்டுருப் படுத்திவைப்பதே கணக்காயர் காரியமாயிருந்தது. தமிழை மேன்மேலுங் கற்க விரும்பினவர் மாத்திரம் பாவலரையு மடைந்து கற்றுவந்தனர். இவர்களும் தாம் கற்ற கல்வியை இலகுவில் பிறர்க்குக் கற்பிப்பதில்லை. மேற்கூறிய பள்ளிக்கூடங்கள் 19-ம் நூற்றாண்டின் முதலில் அனேக மிருந்தன. பின் இராஜாங்கத்தார் உதவியால் அவைகள் சிறிது சிறிதாய்ச் சீர்திருத்தமடைதலாகி நூற்றாண்டின் பிற்பாகத்தில் முற்றும் மாறிவிட்டன. இப்பொழுது அப்படிப்பட்டவைகள் விரல் விட்டெண்ணுவதற்கும் காண்பதருமை.

“தம்மை யடைந்தவர்க்குக் கல்வி கற்பிப்பதும், அவருட் பரிபக்குவ தசையுடையோரை ஞானாசாரியராக அபிஷேகஞ் செய்துவைப்பதும் புலவராய்த் தம்பால் வந்தோர்க்குப் பல பரிசளிப்பதும், அவருட் சிரேட்ட வல்லமையுடையோரைத் தமது ஆதீன வித்துவான்களாக நியோகித்துச்சிறப்புச் செய்வதும் இன்னோரன்ன பிறவுமாகிய ஆதீன பரிபாலனத்தை” மேற்கொண்ட மடாதிபதிகள் சென்ற நூற்றாண்டின் முற்பகுதி வரையில் தமிழின் பால் கண்ணுங் கருத்துமா யிருந்தனர். பிற்பகுதியில் சிறுவர் தமிழ் கற்பதற்கான சாதனங்களைத் தேடினவர் ஆங்கிலங்கற்ற தமிழரும் பாதிரிமாருமே யாவர்.

அங்கிலேயர் இந்தியாவைத் தம் வசப்படுத்திக் கலாசாலை

34-2



களைப் பல விடங்களிலு மேற்படுத்தி சாஸ்திரங்களைப் போதிக்க வாரம்பித்தபோது போதனை இந்தியா பாஷைமூலமாக நடத்துவதெனத் தீர்மானித்தனர். சில வகுப்புக்கள் வரையில் போதனை முழுவதும் இந்திய பாஷைகள் மூலமாக விருக்க வேண்டுமென்றுங் கருதினர். இப்படிப்பட்ட தீர்மானங்களின் படிக்கு அவர் நடவாமை வேண்டிய நூல்கள் சுபாஷைகளி லில்லாமையே. ஆயினும், இராஜதானி யதிகாரிகளும், சர்வகலா சங்கத்தாரும் தமிழிலுள்ள நூல்களைப் பல பரீக்ஷைகளுக்குப் பாடமாக ஏற்படுத்தாவிட்டால் சென்ற நூற்றாண்டிலேயே தமிழ் க்ஷீணதசை யடைந்திருக்கும்.

உற்று நோக்குங்கால் தமிழ் சென்ற நூற்றாண்டில் விருத்தி யடைந்தே யிருக்கிறது. இனி, தமிழை இன்னும் விருத்திசெய்வது நமது சங்கம் போன்ற சங்கங்கள் மேற்கொள்ளவேண்டிய கடமையாம். நமது சங்கமும் தமிழின் அபிவிர்த்திக்காக அதன் பால் உழைப்பவரும் நீடூழி வாழ்வாராக.

நச்சினார்க்கினியார்.

---

# விஷ்ணுவர்த்தனன்.

## (166-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுமார் 1128 கி. பி. சிரவணபெலகோலா (Sravana Belagola) வில் கிடைத்த சாசனமொன்றில் அகளங்கன் என்னும் பெயர் பூண்ட ஜைனரொருவர் இத்தகைய செய்கை செய்ததாகக் கூறப் பெற்றுளது. காஞ்சியிலுள்ள பௌத்தர்கள் ஜைனர்களைத் தொலைக்கக் கருதி 855 கி. பி. யில் ஹிமசீதளன் முன் வாதத்துக்கு வரும்படி வடகன்னடத்திலுள்ள சுத்தபுரத்திலிருந்து ஜைனர்கள் குருவுக்குச் செய்தி அனுப்பினார்கள். முன்பொருசமயத்தில் வீரசைவர்களுக்காகப் புத்தர்களைத் தோல்வியடையச் செய்த தைரியத்தால் சில நாள் வாதம் புரிந்து ஜைனகுரு ஜெயம் பெறவும், ஹிமசீதளன் புத்தர்களைச்

செக்கிலிட்டுத்திரிக்க ஆணையிட்டார். ஆயினும் குணசீலனு கிய அகளங்கன் இவ்விஷயத்தில் தலையிட்டு அவர்களை இலங்கை இதலிய தீவுகளுக்கு அனுப்பச் செய்தார். இப்படியானதற் குப் பின்னிட்டும் புத்தர்கள் நாடுகளுக்கதிபதிகளாக விருந்த தாகவும் தெரிகிறது.

செக்கிலிட்டுதிரித்த விஷயம் கட்டுவிஷயமென்றே ஒப்புக் கொள்ளவேண்டியது. விஷ்ணுவர்த்தனராவது அவர் சந்த தியாராவது, இதற்கு உடன்பட்டிரார்களென்பது அவர்கள் சரித்திரத்தில் நடந்த சம்பவங்களால் நன்கறியலாகும். இராஜாங்க ஸ்தலமாகிய மேல்கோடியிலிருக்கும்பொழுது, சாமுண்டிமலைமேலிருக்கும் சிவலாயத்துக்கு அவர் மானியம் விட்டுப் பொருளு முதவினர். ஹேல்பத்திலுள்ள ஜினலயத் தில் ஜைனர்கள் நைவேத்தியம் செய்த பிரசாதம் அவருக்கு அனுப்பப்பெற்று வந்தது. தன் வெற்றிக்கறிகுறியாக அக் கடவுளுக்கு விஜயபார்சுவநாதர் என்ற பெயரும் விளங்கிவரச் செய்தார். ஸ்ரீபாலதிரிவிதயாதேவரை (ஜினதார்கீகரை) உப சரித்து நன்குமதித்துத் தம் குழந்தைகளுக்குக் குருவாகவும் நியமித்தார். இக்காலத்தில் தான் வீரசைவர்கள் (இலிங்கா யத்தார்கள்) ஜாதி வெளிக்கிளம்பியது. இப்படியாகவும் அந்த நூற்றுண்டில் ஜைனமதம் தெற்கில் வைஷ்ணவமதஸ்தர்களா லும், வடக்கில் வீரசைவர்களாலும் எதிர்க்கப் பெற்றது. அக் காலத்து மன்னர் மந்திரிகள் இவ்வெதிர் மதஸ்தர்களுடன் நடந்துவந்தது அவர்களின் சாமர்த்தியத்தைப் புலப்படுத்து கிறது. தற்கால மன்னவர்கள் இவர்களிடமிருந்து யுக்தியனு பவங்களறிந்து கொள்ளலாம். ஹரிஹரர் கோயில் கட்டப் பெற்ற விஷயம் பின்வருமாறு கூறப்பெற்றுளது. சோழமன் னன் மந்திரி வீரநரசிம்ம தேவர் (போலவதந்நாதர் என்பவ ரும் இவரே) 115 தங்கக் கலசங்களுடன் கூடிய ஹரிஹரன் கோயில் கட்டுவித்தார். இதின் கருத்தென்னவெனில் வைஷ் ணவ சைவமதஸ்தர்களுள் சமாதானம் உண்டாக்கி வைப்பதே. சிலர் ஹரியைவிட இம்மண்ணுலகில் இதர கடவுளில்லையென் றும் பிறிதுஞ் சிலர் ஹரனைவிட இதர கடவுளில்லையென்றும்

சொல்லுவதால், கூடலூரில் இருகடவுளையும் ஒரேசிலையில் ஹரிஹரரென்றபெயருடன் ஆவாகனம் பண்ணி வைத்தது நலமாகவேயருந்தது. அவர் கருணையுடன் நம்மைக் காப்பாற்றுவாராக. மகாவிஷ்ணுவினம்சத்தைச் சர்வேசுரர் கிரகித்துக் கொண்டார். சர்வேசுவரரின் சிறந்த அம்சத்தையும் உருவத்தையும் விஷ்ணு அடைந்தார். வேதமொழி நிலைபெறும்படி கூடலூரில் ஹரிஹரர் ஒருருவத்துடனின்றார். அவர் நம்மைக் காப்பாராக. போலவதந்நாதர் அஞ்சனம் போட்டுப் பணம் திரட்டினர். இல்லாவிடில் 100 கலசங்கள் வைத்த கோயில்கட்ட இயலுமா? முற்காலத்தில் ஹேர்மாடிடி அரசன் ஹரிஹரர் கோயில் கட்ட எத்தனித்த காலத்தில், "என் கோயில் கட்ட இனி ஒருவன் பிறப்பான். ஆகையால் நீ நிறுத்திவிடலாம்" என்று கனவு கண்டனனாம். "தகுந்தவிதமாய் நீதான் கட்டமுடியும்." என்று போலவதந்நாதருக்கு அநுகிரகித்தனராம். அவ்வண்ணமே அவர் கட்டிமுடித்தனராம்.

ஒரு வைஷ்ணவ மந்திரியார் இருமதக்கட்சியை யொழித்துச் சமாதானமுண்டாக்கப் பொதுக்கோயில் கட்டுவித்தது மதத்தைப்பற்றிய அவரின் விரிவான எண்ணங்களைக் காட்டுகிறது. இத்தகைத்தான விஷபம் காணுதற்கரிதேயாம்.

மனப்பூர்வமான வைஷ்ணவர்களாயுள்ள மந்திரிமார்களும் அரசர்களும் இத்தகைய கோயில் திருப்பணி செய்வது ஓர் வீரச் செய்கை. விஷ்ணுவர்த்தனர் வைஷ்ணவராய்த்திரும்பினபிறகு வாழ்நாட்களை யெல்லாம் ஸ்ரீமந் நாராயணனுக்கு இல்லமமைப்பதிலோ அல்லது தொன்றுதொட்டுள்ள வைகளுக்கு மானியமளிப்பதிலேயோ கழித்தார். தால்காடு வீர நாராயணன் கோயிலுக்கும், பேளூர் விஜயநாராயணன் கோயிலுக்கும், பேலூர் கீர்த்திநாராயணன் கோயிலுக்கும் வேண்டிய திரவியம் உதவினர். நாட்டிலுள்ள கோயில்களைப் பழுது பார்த்து, பழைய முன்னிருந்த நிலைமைகளையடையச் செய்தார். எந்த மதத்தினரென்றும் கருதினரில்லை. இவர் சேனு

வீரராகிய கங்க ராஜர் ஜைனர்கோயில் பலவற்றிற்கும் தம் எஜமானன் அநுமதிமேல் வேண்டியன உதவினர். இந்த வழியிலேயே இவரின்பின் சிங்காதனமேறியவர்கள் சைவம், வைணவம் என்ற வித்தியாசமொழித்தவர்களாயிருந்தார்கள்.

மதவிஷயத்தில் விஷ்ணுவர்த்தனர் தன்மதப் பற்றுகவேயிருக்கவில்லை. இருமதத்தையும் ஒன்று சேர்க்கமுடியாவிட்டாலும், ஒரு மதத்துக்கும் இடையூறு செய்யவில்லை.

**S. N. ஸ்ரீநிவாஸன்.**

---

# அச்சுதராயாப்பியுதயம்.

(206-ம் பக்கத்தொடர்ச்சி.)

இச்செய்திகளைச் செவியுற்ற அரசனது கடைக்கண்கள் சற்றுச் சிவந்தன. அவர் சைனியங்களை வெளியூர்களுக்குப் புறப்பட ஆயத்தப்படுத்தும்படி சேனாபதிக்குக் கட்டளையிட்டனர். விரைவில் வெளித்தேசங்களுக்குச் சவாரிபோகத் தீர்மானித்தனர். புறப்படுவதற்குப் பொருந்தியவொரு நல்ல நாளும் குறிப்பிடப்பட்டது. அன்றையத்தினம் அரசர்தம் கடமைகளையெல்லாம் முடித்துக்கொண்டு, தம்மையெதிரேற்றழைக்கவந்த சிற்றரசர்களைக் கடைக்கணித்து, நிரம்பிய யானைப்படை குதிரைப்படை காலாட்படை முதலியவற்றோடு புறப்பட்டனர். எவ்வகைப்பட்ட படைக்கலங்களும் சாமான்களும் குறைவின்றிக் கூடவே கொண்டுபோகப்பட்டன. வண்டிகளிற் கட்டிய எருதுகள் பாரமிறக்கி மீண்டு வருவனபோல இறக்கமான விடங்களில் விரைந்தும், உள்ளதற்கிருமடங்கதிகமாகப் பாரமேற்றப்பட்டனபோல ஏற்றமான விடங்களிலூர்ந்தும், பூராப்பாரமேற்றப்பட்டிருப்பினும் பட்டும் படாதனபோல சம நிலங்களில் ஊக்கத்துடன் நடந்தும், அவைகளை யிழுத்துச் சென்றன. சவாரி மெதுவாகவே போய்க்கொண்டிருந்தது. சிலநாள் சென்று

சந்திரகிரி போய்ச் சேர்ந்தனர். அங்கு பாளயமிறக்கி, சைனியங்களை யெல்லாம் அவ்விடத்து நிறுத்திவிட்டு, அங்கிருந்து திருப்பதி மலையடிவாரஞ் சென்றனர். அவ்விடஞ் சென்றதும் அரசர் பக்தியென்னும் பிடிப்பையே யூன்றிப்பிடித்துக்குதிரையினின்றிறங்கி மலைமேலேறினர். கரடுமுரடான கற்றரைகளில் கால்நடையாகவே நடந்து சென்றனர். ஓகோ! அவரது தெய்வபக்தியையும் திடசித்தத்தையும் பாருங்கள். மலையினுச்சி சேர்ந்ததும் ஸ்நானஞ்செய்து சுத்தமானவஸ்திரங்களைத் தரித்து பக்தி மிகுந்தவராய் எம்பெருமான்றிருவடிகளைச் சென்று சேவித்தனர். பிறகு எம்பெருமான்றிருவடிச்சேவைகளிலாழ்ந்தவராய் அங்கேயேயிருந்து சிலநாள் கழித்தனர். அங்குள்ள குகதீர்த்தத்தை நன்றாக வெட்டிப் படிக்கட்டுகளமைத்துச் செம்மைப்படுத்தினர். எம்பெருமானுக்குப் பிரபாவளி, கர்ணகுண்டலங்கள், நட்சத்திரங்கள் போல ஒளிகதிர்வீசும் முத்துவடங்கள், இரத்தினங்களால் கட்டப்பட்ட பதக்கம், கிரீடம், மற்றுமநேகம் பட்டுவஸ்திரங்கள், ஆபரணங்கள் இவைகளை யெல்லாஞ் சமர்ப்பித்தனர். சிலநாள் கிரமித்து திருக்காளத்திக்குச் சென்று சிவபிரானைத் தரிசித்து, அக்கோயிலுக்கிருந்த அய்வேஜிக்குறைவையறிந்து அதை நீக்கக் கருதி (நவஸீமபூமி) ஒன்பானெல்லைப்பூமி யெனப் பொருள்படும் நிலங்களை மானியம் விட்டனர். அவ்விடம் விட்டுப்புறப்பட்டு விஷ்ணுகஞ்சி சேர்ந்து, வரதராஜப்பெருமானைப் பணிந்து அவரது சன்னிதியில் முத்துத்துலாபாரம் நடத்தினர். அதாவது, திராசுத்தட்டொன்றில் தம்மையும், மற்றொன்றில் தமக்கிணையாக நன்முத்துக்களால் தம்மையொப்பப் புருஷவடிவமாகவமைக்கப்பட்ட முத்துக்குவியல்களையும் வைத்து நிறுக்கப் பெற்றனர். பிறகு அம்முத்துக்களை யெல்லாம் நல்லறிவு நல்லொழுக்கங்களாற் சிறந்த பெரியோர்களுக்களித்து அவர்களை யகமகிழச்செய்தனர். அவர் அவ்வாறு விஷ்ணுகஞ்சியிலிருக்கையில், அவரது படையாளர்களின் பேரி முரசு முதலியவைகளின் பேரொலிகளால் மந்திர வலிமையால் விஷம் நீங்குவதற்கொப்ப, இருமாப்படங்கித்

திருவண்ணுமலையிலுள்ள வேட்டுவர்கள் கூட்டமாக வந்து, பாதகாணிக்கைகள் செலுத்தி, அரசனைத் தொழுது பணிந்து நின்றனர். அவர்கள் முடிகளில் மயில் தோகைகளைச் சூடியும், கைகளில் விற்களைப்பிடித்தும், கழுத்துகளிற் சோழிகளாற்கட்டப்பட்ட மாலைகளையணிந்து மிருந்தனர். அவர்கள் மிக்க பணிவுடையவர்களாய்த் தொடர்ந்து செல்ல அரசர் திருவண்ணுமலைக்கேகினர். அங்கே அருணகிரிநாதரை நமஸ்கரித்துக் கைகூப்பிப்பிரார்த்தித்து நிற்கையில் தமக்குப் புலப்பட்ட ஏதோ சில குறிப்புகளால் தம்மனதிற்கொண்ட கருத்து கைகூடினதாக நிச்சயித்து, ஜயபேரி யடித்துக் கொண்டு தாமதமின்றி அங்கிருந்து நேராகத்தென்றிசை நோக்கிச் சென்றனர். வழியில் ஆங்காங்கு வாழையும் கரும்பும் தெங்கும் கமுகும் நெற்பயிர்களும் நிறைந்து கண்ணுக்குக் குளிர்ச்சியான பலகாட்சிகளையளித்து தம் வரவை நோக்கி வழியோரங்களில் காத்து நிற்பனபோலவிருந்த பற்பல விடங்களையுங் கண்ணுற்றுக்கொண்டு காவேரிதீரம் போய்ச் சேர்ந்து ஸ்ரீரங்கம் சேர்ந்தனர். ஆற்றோரங்களில் எங்கே பார்த்தாலும் தென்னைமரங்களும் கமுகுமரங்களும் மகிழமரங்களும் வாழ்மரங்களும் நிறைந்த தோப்புகளுந் தோட்டங்களுமாயிருந்தன. அவர் அவ்வாற்றோரங்களில் கூடாரங்களடித்துச் சைனியங்களை யெல்லாம் அவைகளில் இறங்கச் செய்தனர். தாம் காவேரியில் ஸ்நாநஞ் செய்து, தம்முடன் வந்திருந்த சிற்றரசர்களோடு ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்குட் சென்று பள்ளிகொண்ட பெருமாளைச் சேவித்தனர். ஸ்ரீரங்கத்திலிருக்கையில், ஸகளராஜன் குமாரன் அரசர் பக்கத்தில் வந்து அவரை நோக்கி "மகாராஜாவே! நான் தண்டெடுத்துச் சென்று சேரனைவென்று அவன் சார்பிலிருக்கிற சோழனைக் கைப்பிடியாகப்பிடித்துச் சமூகத்தில் கொண்டுவந்து நிறுத்துகிறேன். அதற்கையமில்லை. தாங்கள் அவர்களைப் பொருட்டாக வெண்ணி நேரே நின்று அவர்களுடன் சண்டை தொடுக்கத்தகாது. யுத்தம் சரிசமானமானவர்களுக்கே பொருந்தும்? தங்களுக்கொருபொழுதும் அவர்கள் சரிசமானமாகார்கள்.

அவர்களுக்கு நானே சரிசமானமானவன். இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரம் வாஸயோக்கியமாகக் காணப்படுகிறது. ஆதலின் தாங்கள் சிறிது நாளிங்கிருந்து ரங்கநாதன் திருவடிச்சேவை செய்துகொண்டிருக்கவும், சேரனோடு யுத்தஞ் செய்யத் தண்டு களுடன் முந்தி நான் செல்லவும் உத்தரவாகப் பிரார்த்திக் கிறேன்,'' என்று பணிவாகப் பகர்ந்தனன். அரசருக்கும் சில நாள் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்யப் பிரிய மாகவே இருந்தது. ஆனது பற்றி அவர் ஸகளராஜன் குமாரனை, அவன் வேண்டுகோளுக்கிணங்க, தண்டுகளுடன் சேரநாட்டுக்கு முந்திப் படையெடுத்துப்போக அநுமதி கொடுத்தனர்.

ஸகளராஜன் குமாரன் சைனியங்களுடன் புறப்பட்டு மது ரையைக்கடந்து சென்று, கண்ணடி போற்றெளிந்து நிரம்பிய தண்ணீர் இருபாரொத்தோடிக்கொண்டிருந்த தாமிரபரணி யாற்றோரம் போய்ச்சேர்ந்தனன். அவ்வாற்றோரத்திலிருந்து கொண்டு, தம் கீழுள்ள தண்ட நாயகனைச் "சேரனைத் தொலைபலாடி அவன் கொழுப்பை யடக்கிவருக'' வென்று கட்டளையிட்டனுப்பினன். திருவநந்தபுரத்தில் நிலையாயிருந்து சேரநாட்டையாளும் ராஜவம்சத்தவர்கள் திருவடிகள் எனப் படுவர். விஜயநகரத்தார்கள் படையெடுத்து வருகிறார்க ளென்ற செய்தியை ஏற்கனவே கேள்விப்பட்ட திருவடியரசன் நால்வகைப்பட்ட தம் சைனியங்களையும் திரட்டிக்கொண்டு பெருத்த ஆரவாரத்துடன் தாமிரபரணி யாற்றோரத்திற்குச் சிறிது தூரத்தில் வந்து, எதிரிகளை எதிர்த்து நிற்கத் தயாரா யிருந்தனன். விஜயநகரத்தார்களின் சேனைகளெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டன. இருதிறத்தார்களுக்கும் சண்டை வெகு கடுமையாய் நிகழ்ந்தது. இருகட்சிகளிலும் சேதங்கள் மிகுதியாக வேற்பட்டன. வெற்றி இருகட்சிகளில் இன்னா ருக்குக் கிடைக்குமென்று எவரும் திட்டமாய்ச் சொல்ல முடி யாத வண்ணமாயிருந்தது. திருவிதாங்கூர் சைனியங்கள் விஜயநகரத்தாருக்குச் சிறிதும் சளைத்தார்களில்லை. இந்நிலை மையில், விஜயநகரத்தார் அடங்காக் கோபமெழுந்தவர்களாய்

உக்கிராவேசம் பூண்டு வெகு மூர்க்கத்துடன் சண்டைபோடத் தலைப்பட்டனர். திருவிதாங்கூர் சைனியங்கள் சிதறுண்டு சின்னாபின்னப்பட்டுப் பின்னடையத் தலைப்பட்டன. திருவடியரசன் இனி எதிரிகளைத் துரத்தியோட்டத் தன்னால் மாளாதென்று கண்டு சைனியங்களில் சண்டையில் மாண்டவர்கள் போக பாக்கியிருந்தவர்களுடன் ஸகளராஜனிடம் சென்று சோழனை யொப்பித்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டு, அநேகம் யானைகளையும் குதிரைகளையும் கொடுத்துச் சமாதானஞ் செய்துகொண்டனன். ஸகளராஜகுமாரன் திருவடியரசனை அவன் நாட்டிற்கு அதிபதியாக ஏற்றுக்கொண்டனன். ஆயினும் முன்னாளில் பாண்டிய நாட்டைச் சேர்ந்திருந்த விடங்களையெல்லாம் பாண்டிய நாட்டோடு சேர்த்து, பாண்டியனைத் திருவடியரசனுக்கு மேலான படியில் அமர்த்தினன். பிறகு அநந்தபத்மநாபஸ்வாமியைத் தொழுதுவிட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பிப்போக வெண்ணங்கொண்டு, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் போதிய மலையையும் சமுத்திரத்தையும் வழியில் கண்ணுற்றுக்கொண்டு, திருவநந்தபுரம் போய்ச் சேர்ந்தனன். திருவநந்தபுரத்தில் திருமாலைத் துதித்து வணங்கிவிட்டு, தன் பரிவாரங்களுடன் ஸ்ரீரங்கத்தை நோக்கித்திரும்பினர். திருவடியரசன் விஜயநகரத்தரசரான அச்சுதராயரை நேரிற்கண்டு சோழனை யொப்பித்துச் சமாதான வுடன்படிக்கையைப் பலப்படுத்திக்கொண்டு வரும்படி காலங்கண்ட விருத்தாப்பியர்களான தம் பிரதான மந்திரிகளிற்சிலரை ஸகளராஜகுமாரனுடன் சேர்த்தனுப்பினன். ஸ்ரீரங்கம் வந்து சேரவே ஸகளராஜன்குமாரன் ஆஜாரவாயிலிலேயே குதிரையினின்றிறங்கி, இராஜகிரகத்துள் நடந்து சென்று, அரசனைத் தொழுது வணங்கி, "மகாராஜாவே, கேரளதேசத்தரசனால் அனுப்பப்பட்ட பிராயஞ்சென்ற பிரதான மந்திரிகள் சிலர் தங்கள் தலைவாயிலிலே காத்துநிற்கிறார்கள்" என்று சொல்லி, அவர்களை அரசரநுமதிபெற்று உள்ளே அழைத்துச் சென்றனன். அரசர் சபையில் ஆதனத்தில் வீற்றிருந்தார். அநேக கல்விமான்களும் கவிஞர்களும் இராஜகுமாரர்களும் இராஜாங்க உத்தி

யோகஸ்தர்களும் நிறைந்திருந்தனர். அரசருக்குப் பக்கத்தில், தலைமுறை தொட்டு உள்ளன்பு மிகுந்து நம்பிக்கையாளர்களென்று நிச்சயமாய்த்தெரிந்த குறுநிலமன்னர்கள் அரசனது பக்கத்தில் காத்திருந்தனர். திருவிதாங்கூர் மந்திரிகள் அரசரைத் தூரத்திலேயே பார்த்து, அங்கிருந்த வண்ணமே கை கூப்பித் தொழுது வணங்கி, பின்பு அவரருகிற் சென்றனர். அரசரும் அவர்களைக் குளிர்மையாகப் பார்த்துபசரித்தனர். பக்கத்தில் நின்ற சோழனைக்கண்டு கடிந்து, "இந்தக்கஞ்சிநம்பிக்கு நீதிநூல்களுக்கிணங்க தக்கபடி தண்டனைவிதிக்க" வென்று சொல்லித் தம் மந்திரியின் கையிலொப்புவித்தனர். அரசர் பிறகு பக்கத்தில் நின்ற பாண்டியனை நோக்கி, "நீதிவழுவி முறைதப்பிப் பொழிகடந்து அயல் நாடுகளை யெல்லாம் தம் நாட்டோடு சேர்த்துக்கொண்டு ஓயாமல் உம் நாட்டுக்கு அழும்பு செய்துகொண்டிருந்த சேரனுக்குத் தக்க தண்டனையாய்விட்டது அவன் அடங்கிவிட்டான். பண்டை நாள்போல் உம் நாடுகளை யெல்லாம் நீர் அவனுக்கு மேலாக ஆண்டுவருவீராக" வென்று கட்டளையிட்டனர். பாண்டியன் தலை குனிந்து "மகாராஜாவே, திருவநந்தபுர ராஜ்யம் திருமாலுடையது. திருவடிகள் திருமாலினடியார்கள். திருமாலுடைய இராஜ்ஜியத்தை வைத்து ஆளுவதிலும் மகாராஜாவின் திருவடிகளைச் சேவித்துக்கொண்டிருப்பது எனக்கு மேன்மையானது. ஆயினும் மகாராஜாவின் கட்டளைக்கு நான் உடன்பட்டேன்" என்று சொல்லித் தம் நாட்டுக்குத்திரும்பிப் போயினன். அரசரும் அன்றையதினம் சாயங்காலவேளையில் ரங்கநாதனைத் தரிசித்துப் பிற்றை நாள் அங்கிருந்து சவாரி புறப்படத் தீர்மானித்தனர்.

(இன்னும் வரும்.)

**T. S.** குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.

---

# தேவதத்தன் சரிதம். ‡

இராக்ஷத சர்ப்பத்தைக் கொல்வதிலும் சிறந்த வீரச் செய்கை யாது? நாம் எனும் அகம்பாவத்தை அடக்குவதே. இதற்கு உதாரணம் பின்வருமாறு. மத்திய தரைக்கடலின் கீழண்டைக் கோடியில் ஏஷியாகண்டத்துக் கருகில் ரோட்ஸ் என்று பேருள்ள ஓர் தீவு இருக்கிறது; இதில் ஹாஸ்பிட்டாலியர்கள் என்று பெயருள்ள ஒரு சந்நியாசிக் கூட்டத்தவர்கள் இத்தீவைத் தங்களுக்கு உறைவிடமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சந்நியாசிமார்களாக மாத்திரம் இருக்கவில்லை; இவர்களுக்குப் போர்புரியவும் தெரியும்; நோயாளிகள், காயப்பட்டவர் முதலியோர் தங்கள் உதவியைத் தேடிவந்தால் தக்கவாறு வைத்தியம் செய்து சௌஸ்தம் செய்து அனுப்பவும் தெரிந்து கொண்டிருந்தார்கள். சந்நியாசிசெய்யவேண்டிய தர்மப்படி பரலோகஸாதகமான இதங்களைச் சிடர்களுக்கு எடுத்துக் கூறி தங்கள் புஜபல பராக்கிரமத்தால் துஷ்டர்களைநிக்கிரகம் செய்து சிஷ்டர்களைப் பரிபாலனம் செய்து, நோயாளிகளுக்கு இவ்வாறு நோய் தீர்த்தும் வந்தபடியால், இவர்கள் ஜனங்களுக்கு மஹோபகாரிகளாக இருந்தார்கள் என்பது நன்கு விளங்கும். இந்தச் சந்நியாசிப் போர்வீர வைத்தியத்திருக்கூட்டத்தில் சேர்ந்து சத் கைங்கரிய பலனைக் கைக்கொள்ள பல உயர் குலத்தாரும் செல்வரும் இந்த ஹாஸ்பிட்டாலியர்கள் மடாலயத்திற் பிரவேசித்து மடாதிபதியைத் தங்கள் சத்குருவாக ஸ்வீகரித்துத் தங்கள் உடல் பொருள் ஆவியனைத்தையும் அவரிடத்தில் ஒப்புவித்து நன் முயற்சி செய்து வந்தனர்.

இவ்வாறு மடத்தின் சிஷ்யவர்க்கத்தவராகச் சேர்ந்து கொண்டவர்களில், தேவதத்தன் அல்லது தியூதோன் என்று ஒரு பிரான்சு தேசத்துக்குலமகன் இருந்தான். இவன்

‡ "பொன்னான நற்செயல்கள்" என்னும் நூலிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.

தந்தை முதலியவர்களுக்கு உறைவிடம் பிரான்சு தேசத்தின் பிரிவாக இருந்த லாங்குவிடாக் மாகாணத்திலுள்ள கேஸான் என்னும் ஓர் கோட்டை. தன் செல்வம், சௌகரியம், செல்வாக்கு முதலியவைகளைப் பொருட்டாக மதியாமல் லோகோபகாரத்தின் பொருட்டுத் தன் பாக்கியங்களை யெல்லாம் துறந்து ஹாஸ்பிட்டாலியர்கள் மடத்தில் சேர்ந்து, நன் முயற்சிகளிலும், வீரதீரச் செய்கைகளிலும் முதற்றரமானவர்களில் ஒருவனென்று பேர்வாங்கினன்.

இவ்வாறு இருக்கும் காலத்தில், அந்த ரோட்ஸ் தீவில் நகரத்திற்குச் சில மயில் தூரத்தில், செயின்று ஸ்டீபன் தேவாலயம் என்று ஒரு மலைக்கோயில் ஒரு குன்றின் மேல் வெகு காலமாகப் பிரசித்திபெற்று ஸ்தலயாத்திரைக்காரர்கள் வந்து தரிசனம் பண்ணிவிட்டுப் போகும் புண்யஸ்தலமாக இருந்தது. அந்தக் குன்றுக்கு அடுத்த ஒரு சதுப்பு நிலத்தில் ஒரு பெரிய ராக்ஷதஸர்ப்பம் சஞ்சரித்தது. ஸ்தலயாத்திரைக்காரர்கள் ஒண்டிசண்டியாக வந்தால் அவர்களைத் தன் கூரிய பற்களால் பற்றியிழுத்துக் கொன்றுவிடும்; மலையோரத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சில இடைப்பிள்ளைகள்கூட இந்தக் கொடிய பாம்பால் நாசமடைந்தார்கள். சந்நியாசிப் போர்வீரரிலும் பலர் இதைச் சங்கரிக்க முயன்றதில் இறந்து போயினர். அதன் உடம்பில் வலுவான செதிள்கள் கவசம் போல் அமைந்து அதைக் காப்பாற்றியதாலும், அதன் கோரமான நீண்டபற்கள் பார்ப்போருக்குத் திகில் உண்டு பண்ணத் தக்கனவாய் இருந்தபடியாலும், அதனுடன் போர்புரிதல் அபாயகரமான முயற்சியாக இருந்தது. தியூதோன் டி கேஸான் என்னும் தேவதத்தன் இதனுடன் போர் செய்யப் போய் வெல்லமுடியாமல் உயிர்தப்பி வந்ததே கஷ்டசாத்தியமாயிற்று. இதை யறிந்த வில்லனீவ் என்னும் மடாதிபதி "ஒருவரும் அந்தப் பாம்பிருக்கும் இடத்திற்குப்போக வேண்டாம்; அப்புறம் பார்த்துக்கொள்வோம்; அதனுடன் போர் செய்ய முயலவேண்டா" மென்று கண்டிப்பான உத்தரவு செய்துவிட்டார்.

தேவதத்தனுக்கோ மிக்கரோஸம். இந்த ராக்ஷத ஸர்ப்பத்தைச்சங்கரிக்கிறது அல்லது உயிர் துறக்கிறதுஎன்று தீர்மானித்தான். தன் மடாதிபதியின் உத்தரவு பெற்றுக்கொண்டு பாம்போடு போர் செய்யப் போவதென்றால், வில்லனீவ் என்கிற தன் மடாதிபதி இடங்கொடார் என்று அவனுக்குத் தெரியும். ஆகவே, தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவத்தன் ஒரு யுக்தி செய்தான். சில மாதங்களுக்குத் தன் ஜன்ம பூமியாகிய லாங்குவிடாக்கு என்னும் இடத்திலுள்ள கேஸான் கோட்டையில் தந்தையோடு கொஞ்சகாலம் தங்கி தேக சௌக்கியத்தைக் காப்பாற்றிவர ரஜாக் கொடுக்க வேண்டுமென்று மடாதிபதியைக் கேட்டுக்கொண்டான். சரியென்று திருக்கூட்டத் தலைவர் அநுமதி தந்தார். தேவதத்தன் தன் தந்தையின் உறைவிடத்திற்குப் போய்ச் சேர்ந்து கொஞ்சகாலம் அங்கே தங்கியிருந்தான். அப்படி இருக்கும்போது, நல்ல ஜாதியைச் சேர்ந்த ஒரு குதிரையையும் இரண்டு சூரத்தனமுள்ள நாய்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு ராக்ஷதஸர்ப்பத்தோடு சண்டைபோடத்தக்கவிதமாக அவைகளுக்குப் போர்ப்பழக்கம் செய்வித்தான்: தான் பார்த்த ராக்ஷதஸர்ப்பத்தைப்போல் ஓர் உருவாரம் செய்வித்து அதன் வயிறு தோலால் மூடப்பட்டு போலாக (கூடாக) இருக்கும்படி அமைத்து அந்த போலுக்குள் உரொட்டி முதலிய தின்பண்டங்களை நிறைத்துவைத்தான். கடித்தபோது உணவு வெளிப்படவே, நாய் உண்டுவிரைவிற் கற்றது. அந்தப் பாம்பிற்கு முதுகுச்செதில்கள் வலுவானவை; எப்படிப்பட்ட குத்தாயுதத்தைப்பிரயோகித்தாலும் அவைகள் அப்பிராணியைக் காயப்படுத்தாமல் செதில்கள் காத்தன; வயிறுமாத்திரம் மிருதுவாக இருந்தமையால் அங்கு இடங்கண்டு குத்தினால் அதைச் சங்கரிக்கலாம்; ஆனால் பயங்கரமான பற்களைக் காட்டிப் பயமுறுத்திப் பகைவருக்குத் தன் வயிற்றுப் புறத்தை இலக்காகும்படி காட்டாமல் இதுவரையில் தப்பித்துக்கொண்டு வந்தது. இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, தேவதத்தன் மேற்கூறிய உருவாரத்தின் வயிற்றைப்பார்த்துத் தாக்கும்படி தன் நாய்க

ளுக்குப் பழக்கம் செய்தான். குதிரையும் பாம்புருவத்தைக் கண்டு அஞ்சாது எதிர்த்துச் செல்லக் கற்பிக்கப்பட்டது. குதிரைக்கும் நாய்களுக்கும் இப்போர்ப் பழக்கம் நன்றாய் அமைந்தது என்று கண்ட பிறகு, வீட்டாரிடத்தில் விடை பெற்றுக் குதிரை நாய் இவைகளுடன் கப்பலேறி ரோட்ஸ் தீவிற்குப்போய்ச் சேர்ந்தான்.

(இன்னும் வரும்.)

உடையார்கோவில், அப்பாசாமி ஐயர்.

---

# நன்மையும் தீமையும்.

இவ்வுலகத்திலெங்கிலும் தீமையே குடிகொண்டிருக்கிறதென்று சிலரும் தீமையென்பதே உலகத்திலில்லையென்று சிலரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வேறு சிலர் நன்மையென்றும் தீமையென்றும் விஷயங்களின் தராதரத்தை நோக்கி விவரிக்கிறதேயன்றி முற்றிலும் நன்மையென்று சொல்லப்படுவதும் முற்றிலும் தீமையென்று சொல்லப்படுவதும் உலகத்தில் ஒன்றுமே இல்லையென்று வாதிக்கிறார்கள். ஒருவனுக்குத் தீமையாகத் தோன்றுவது மற்றொருவனுக்கும் தீமையாகவே தோன்றவேண்டுமென்றும், ஒருவனுக்கு நன்மையாகத் தோன்றுவது மற்றொருவனுக்கும் நன்மையாகவே தோன்றவேண்டுமென்றும் ஒரு நியமத்தை உலகத்தில் காணாமலிருப்பதே இவ்விதமாக அவர்கள் எண்ணுவதற்குக் காரணமாயிருக்கிறது. மற்றும் சிலர் பொய், வஞ்சனை, கொலை, களவு முதலியவற்றை உள்ளபடியே உற்றுப்பார்த்தால் தீமைவடிவாகவே யாவருக்கும் காணப்படுமென்றும் கூறுகிறார்கள். இன்னம் சிலரோ நன்மையும் தீமையும் மனிதருடைய மனக்கற்பனையேயன்றி வேறல்ல என்று சாதிக்கிறார்கள்.

இத்தனை சிடுக்குள்ள இவ்விஷயத்தை யாராகிலும் சாதாரண ஜனங்களிடத்தில் எடுத்துப் பேசப்போனால் அவர்கள்

அதற்குச் செவிகொடாமல் ஏதேதோ இவர்கள் பிதற்றுவதாகச்சொல்லி அவமதித்துத் தாம் அவ்விஷத்தைப்பற்றி ஒன்றும் அறிந்துகொள்ளாமலே இருந்து விடுகிறார்கள். ஏதோ கொஞ்சம் கவனித்தார்களென்றாலும் முன்னிருந்ததைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாக மனக்குழப்ப முண்டாகித் திண்டாடுகிறார்களேயன்றி அதனால் கிஞ்சித்தேனும் பிரயோஜனத்தை அடைந்தார்களென்று சொல்வதற்கிடமில்லை.

ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகளாகத் தோன்றுகிற முற்கூறிய அபிப்பிராய பேதங்கள் ஒரு வழியாகப் பார்த்தால் உண்மையாகவும் மற்றொரு வழியாகப் பார்த்தால் உளறுபடியாகவும் முடிகின்றன. அவைகளெல்லாம் வெவ்வேறு நிலைகளிலிருந்து நிதானித்தவர்கள் கொண்ட கொள்கைகளேயாகையால் அந்தந்த நிலையிலிருந்து ஒருவன் உற்றுநோக்கும் பொழுதுதான் அவைகள் உண்மையான கொள்கைகளென்று உணர்ந்தறிவான். அவற்றிற்கு வேறான பல நிலைகளிலிருந்து பார்க்கும் பக்ஷத்திலோ அவைகளைச் சரியென்று சொல்லத் துணியமாட்டான். நம்முள் பலபேருக்கு இது வெளிப்படையாக இருந்தாலும் ஏதேனும் ஒரு விஷயம் நமக்கு எதிர்ப்படுமேயாகில் நடவடிக்கையில் அதன் உண்மையான ஸ்வரூபத்தைக் கண்டுபிடிக்க நாம் தவறிப்போவது ஸஹஜமாயிருக்கிறது. யாராகிலும் ஒரு விஷயத்தைப்பற்றி ஓரபிப்பிராயம் கொடுக்கும்போது அதே விஷயத்தைப்பற்றி நாம் நமது நிலையிலிருந்து சோதிக்கப்புகுந்து நமது அபிப்பிராயத்திற்கு அது இணங்காதிருக்கக்காணவே அதைப் பிசகென்று சொல்லிவிடுகிறோம். ஏனெனில் அந்த விஷயத்தை நமது நிலையிலிருந்து பார்க்கவே கூடாதென்றும் மற்றவர் நிலையிலிருந்தே பார்க்கவேண்டுமென்றும் நமக்கு அந்த ஸமயத்தில் ஞாபகமிருக்கிறதில்லை. நமக்கு எந்த நிலையிலிருந்து பார்த்து வழக்கமாயிருக்கிறதோ அதைவிட்டு மற்றவர் நிலையிலிருந்து பார்க்க மனம் வருகிறதுமில்லை. ஒருவன் பிறருக்கு உதவிசெய்ய விரும்புவானானால் அவன் ஒரு விஷயத்தைப் பலவேறு நிலைகளிலுமிருந்து பார்த்தே தீரவேண்டும். நம்மைச்சுற்றிலுமிருப்பவர்க

356



ளது அறிவின் பக்குவத்தை உற்றுப்பார்த்தால், அவர்கள் வெவ்வேறு படித்தரத்திலிருக்கிறார்களென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. அப்படியிருக்க அவர்களெல்லோரும் தமக்குள் பேதமின்றி விஷயங்களை ஒருவாறு ஆராய்ந்து நம்மைப்போலவே பகுத்தறியவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பது முற்றிலும் பிசகேயல்லவா? நாம் நமது அபிப்பிராயத்தை அவர்களது மனதில் வலுவிலே கொண்டுபோய்த் திணித்தாலும் அவர்களுக்கு அது உள்ளிறங்காமல் உபயோகமற்றுப் போகிறது.

முற்கூறியபடி நாம் ஒரு விஷயத்தை எல்லா நிலைகளிலுமிருந்து உற்றுநோக்கினாலல்லாது உலகத்தில் ஒருவருக்கும் உதவிபுரியவொண்ணாதாகவே, அப்படி உதவிபுரிய முன்வந்தவர்களும் அதற்குடன்படுகிறவர்களும் தங்களுத்தேசப்படி காரியம் கைகூட வேண்டுமென்றால் இவ்விஷயத்தையும் இதைப்போன்றமற்ற விஷயங்களையும் தங்களாலான மட்டிலும் பல நிலைகளிலிருந்து பரியாலோசிக்க வேண்டும்.

நாம் இப்போது நன்மை தீமை என்பவைகளை அவ்விதமாகக் கவனிக்கப்போகிறோமாகையால் நம்மைச் சுற்றிலுமுள்ள மனிதர்கள் எந்த எந்த ஸந்தர்ப்பத்தில் நன்மை தீமையென்னும் சொற்களை உபயோகிக்கிறார்களோ அந்த அந்த ஸந்தர்ப்பத்தில் நாமும் உபயோகித்து அவைகளைத் தனித்தனியே அவரவர்களது சித்தத்தின் பக்குவத்திற்குத் தக்கபடி பல படித்தரங்களில் பொருந்தவைத்துப் பார்ப்போம்.

ஒருவனது இஷ்டத்திற்குச் சாதகமாயிருப்பது நன்மையும் அதற்குப் பாதகமாயிருப்பது தீமையுமாகும்.

1. காட்டுமிராண்டியான ஒரு மனிதனுக்கு நன்மையென்பதும் தீமையென்பதும் கிடையாது. அவனுக்கு அறிவே இன்னம் உதயமாகாமையால் தனக்கு இஷ்டமான பொருள்கள் இன்னவை என்று எண்ணுவதற்கு இடமேது? அவன் பசியால் மிகவும் வருந்தும்போது மட்டுமே இருப்பிடம் விட்டு எழுந்திருந்து ஏதேனும் ஒரு பக்ஷியையாகிலும் மிருகத்தையா

367



கிலும் பிடித்துக்கொன்று தின்றுவிட்டு மறுபடியும் தன்னைப் பசி வருத்துமளவும் உறங்கிக்கிடந்து உடம்பை வளர்க்கிறான். ஆகவே அவனுக்கு நன்மை தீமைகள் உண்டென்று சொல்வதற்கு வழியில்லை.

2. அற்ப விஷயங்களில் ஆசைகொண்டு இழிவுள்ள சித்தவிர்த்தியுடன் இந்திரியங்களுக்கு வசப்பட்டு நிற்பவனொருவனுக்கு நன்மையென்பதும் தீமையென்பதும் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. அவன் கொண்டிருக்கும் ஆசைகளுக்கும் அபிநிவேசங்களுக்கும் சாதகமாயிருப்பது ஒவ்வொன்றுமே அவன் திருஷ்டிக்கு நன்மையாக இருக்கிறது. இந்த நிலைமையில் அவனுக்குத் தன் இந்திரியங்களைத் திருப்திசெய்வதைத் தவிர முக்கியமான வேறுவிருப்பம் ஒன்றுமேயில்லை. அதற்குப் பொருள் அவசியமாயிருப்பதால் அப்பொருள் தேடுவதற்குப் பொய் மோசம் களவு முதலியவற்றை உபயோகிக்கிறான். ஆகவே அவைகளே அவனுக்கு நன்மையாகப்படுகின்றன.

ஒருநாள் அவன் திருடிக்கொண்டிருக்கும்பொழுது அவனை ஒரு போலீஸ்காரன் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டானென்று வைத்துக்கொள்வோம். அந்த ஸமயத்தில் அத்திருட்டுத்தொழில் அவனிஷ்டத்திற்கு விரோதமாக இருப்பதுமன்றி அதற்காக அவன் தண்டனைக்கும் உட்படவேண்டியிருக்கிறது. அப்போதும் அவனுக்குத் திருட்டுத்தொழில் நல்லதல்லவென்று மனதில் படாது. தான் பிடிபட்டதனால் தன்னுத்தேசம் கைகூடவில்லையென்று அவன் எண்ணுவானேயல்லாமல் திருட்டுத் தொழிலால் தான் அரிஷ்டம் விளைந்ததென்று சொப்பனத்திலும் எண்ணமாட்டான். ஆகவே போலீஸ்காரனுக்குத் தான் அகப்பட்டதுதான் பிசகு என்பது அவன் கொண்ட கொள்கையாகிறது.

அவன் அதுமுதல் அந்தக் கொள்கையின் பிரகாரமே அசதிமறதியாகவும் ஒருவர் கையில் அகப்படக்கூடாதென்ற திடசித்தத்துடன் தனக்கு ஹிதமாகத்தோன்றிய திருட்டுத் தொழிலையே கையாடத் தலைப்படுவான்.

நாவின் ருசியையே நாடியிருக்கும் சாப்பாட்டு ராமனொருவனுக்குச் சாப்பாடுதான் புருஷார்த்தமென்று தோன்றுகிறது. அவன் வயிறுபுடைக்கத்தின்று வயிற்றுவலியாலவஸ்தைப் படும்போதும் அவ்வயிற்றுவலியையே பலவாறாக நிந்தித்துப் பேசுகிறானேயொழிய அளவிற்குமிஞ்சி ஆகாரம் செய்ததைப் பற்றி ஒன்றுமே பேசுகிறதில்லை. தனக்கு ஆசை பூர்ணமாவதற்கு வயிற்றுவலி இடைஞ்சலாக இருப்பது அவனுக்கு இஷ்டப்படுகிறதில்லை. ஆகவே தான் வேண்டுமளவு சாப்பிடவும் வேண்டும் வயிற்றில் வலி காணவும் கூடாது என்று நினைத்துத் தடுமாறுகிறான்.

இப்படியே ஒரு மனிதன் மற்ற இந்திரியங்களையும் திருப்தி செய்ய விரும்பி அதற்குச் சாதகமாயிருக்கிற பொருள்களிலுள்ள குற்றங்களை உற்றுப்பார்க்கச் சக்தியில்லாமல் குணங்களாகவே கொண்டு அவற்றால் துன்பத்தை அனுபவித்த பிற்பாடு அவற்றினுண்மை தன் மனதிற்குத் தானாகப்படவே தன்னைச்சுற்றிலுமுள்ள பொருள்களைப்பற்றித் தனக்கிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறான்.

3. ஒரு மனிதன் இவ்வாறு தனது அறிவின் பக்குவத்தரத்தில் சில படிகளுக்குமேல் வந்துவிட்டானென்று இப்போது அறிந்துகொள்ளுகிறோம். அப்பொழுது அவனுடைய உத்தேசங்களும் அவைகளுக்குத் தகுந்தபடி அவனுடைய ஆசைகளும் மாறியேயிருக்கும். இனித்தன்னைப் பார்க்கும் ஜனங்களுக்குத் தன்னிடத்தில் மதிப்புண்டாகும்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை அவனுக்கு மேலிட்டு நிற்கிறது. முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் புகுந்தால் தன் கௌரவத்திற்குக் குறைவு நேரிடுமென்றும் அதனால் தன்னுத்தேசத்திற்கே ஹானி உண்டாகுமென்றும் அவன் தெரிந்துகொள்கிறான். ஆகவே அவனுக்குப் பொய் சொல்வது தீங்கென்று மனதில் படுகிறது. இதனால் இந்திரிய விஷயங்களில் அவனுக்குப்பற்று முற்றிலும் அற்றுவிட்டதாக நாம் நினைக்கக்கூடாது. அவனுக்கு முன்போல அற்பவிஷயங்களில்

புத்தி நாடுகிறதில்லை. கொஞ்சம் சூக்ஷ்மமான விஷயங்களில் நோக்கமுண்டாவதால் அவ்விஷயங்களைக் கைக்கொள்வதற்கு அவன் அதிகப் பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறான். அவ்விந்திரிய விஷயங்களுக்காகவும் தன் ஜீவனத்திற்கு இன்றியமையாத வீடு நிலம் ஆசை உடை உண்டி முதலியவைகளுக்காகவும் வேண்டிய செல்வப்பொருளைச் சேகரிப்பதற்கே தன்னுயிரையுமுடலையும் உபயோகிக்கிறான். பார்ப்பவர்களுக்குத் தன்னிடத்தில் கௌரவத்தாழ்ச்சி தோன்றாமலிருக்க வேண்டுமென்று அவனுக்குப் பூரணமாக விருப்பமிருப்பதால் பயிரங்கமாகத் திருடுவதற்கும் கொள்ளையடிப்பதற்கும் பொய் சொல்வதற்கும் அவன் உடன்படுவதில்லை. அந்தப் படித்தரத்திலிருக்கும் அஸாமிகளுக்கு மேற்பட்ட ஸ்திதியிலல்லவோ அவனிப்பொழுது வந்து இருக்கிறான். அவன் இப்படி ஜீவனம் செய்வதற்கு அதிகச் செலவுபிடிக்குமே; அதற்கு அவன் நியாயமான வழியில் சம்பாதிக்கும் பொருள் போதாதே; அவனுக்கு வேண்டிய பொருள் எங்கிருந்து கிடைக்கிறது என்று சங்கைப்படவேண்டாம். அவனுடைய மூளையின் சக்தி முன்னிருந்ததைவிட வர வர அதிகப்பட்டிருப்பதனால் பணவரும்படிக்குத் தகுந்த யுக்திகளும் தந்திரங்களும் அவனுக்கு உடனுக்குடனே புலப்படும். எல்லோரும் கண்ணியமாக மதிக்கக்கூடிய ஒரு தொழிலைக் கைக்கொண்டு அத்தொழில் சம்பந்தமாகத் தன்னிடம் வருகிறவர்களிடத்தில் ஏதேதோ சமத்காரங்கள் செய்து அவர்களது கைக்காசைக் கவர்ந்துகொள்ளப் பார்க்கிறான். அவன் நாடோடியான ஒரு வழிப்பறிக்கள்வனைப்போலவும் ஒரு மோசக்காரனைப்போலவும் வெளிப்படையாக அவர்கள் பொருளைக் கொள்ளை கொள்வதுமில்லை; தான் ஒரு லாயராக இருந்தால் தன் கக்ஷிக்காரர்களிடத்திலும் ஒரு பெரிய ஸாவுகாராயிருந்தால் தன்னிடம் வியாபார முறையில் வரத்துப்போக்காய் இருக்கும் பேர்வழிகளிடத்திலும் தான் அநீதியாகப் பணம் பறித்துக்கொள்வதை நெஞ்சத்தில் உணர்கிறதுமில்லை. நீதியாக நடந்துகொள்கிறவர்களைவிடத் தான் பணம் அதிகமாகச் சம்பாதிப்பதைப்பற்றி அவன் பெருமை

பாராட்டிக் கொள்வதுமன்றித் தனக்கு அவர்களைக்காட்டி லும் மதியும் ஊஹமும் அதிகமாயிருப்பதால் தொழில் நடத் தும் தோரணை நன்ருகத் தெரிகிறதென்றும் சொல்லிக் கொள் கிருன். இவ்வாறு 'தொழில் திறமையுள்ளவன்' என்ற ஒரு கிலிட்டுப் பெயரை வைத்துக்கொண்டு மினுக்கிக் கௌரமுள்ள கனவானென்று உலகத்தார் கொண்டாட உருட்டிப் புரட்டித் துட்டைத் தட்டிக்கொள்ளுகிருன். யோசித்துப் பார்த்தால் அவன் சொல்லுகிற பொய்க்குக் கணக்கு வழக்கில்லை. செய்து கொள்ளுகிற ஆத்மஸ்துதிக்கு அளவுசங்கையில்லை. இந்தப் படி அவன் தேடும் பொருள் அவனுடைய விஷய சுகபோகத் திற்குத் தாராளமாகக் காண்கிறது. அப்போதும் தன் கௌரவத்திற்கு ஹானிவரக் கூடாதென்று அவனுக்கு இருக் கும் இஷ்டத்திற்கு ஒரு நஷ்டப்பாடுமில்லை. ஆகவே தனக்குப் பெருமையைக் கொடுக்கிற தொழில் திறமை நல்லதென்றும் இழிவைத் தருகிற பொய் களவு சூதுவாதுகள் அங்ஙனமல்ல வென்றும் அவனது திருஷ்டிக்கு இயற்கையாகவே விளங்குகி றது. இப்போது அவன் தன்னை உண்மையாகவே கௌரவ முள்ள பிரபுவாக நினைத்துக் கொண்டிருக்கிறபடியால் நாலு பேரால் இகழ்ந்துபேசப்படும் கள்வர்களையும் மோசக்காரர்க ளையும் மிகவும் தாழ்ந்த ஜன்மங்களாக எண்ணிக் கடுகடுத்துப் பார்க்கிருன்.

இதேமாதிரி ஒருவன் அளவுக்கு மிஞ்சி ஆகாரத்தைத்தான் உட்கொண்டதனுல் உண்டான தீமை இன்னதென்று தானுக வே தெரிந்து கொள்ளுகிறுன். அதாவது அவ்விதமாகச்சாப் பிட்டுவந்தால் தன் சரீரத்தைப் பல பிணிகள் கைக்கொள்ளவே அதனுல் தனக்கு ஒருவேலையும் செய்வதற்குச் சக்தியில்லாமல் போவதனுல் வயிறுபுடைக்கத் தின்பதில் அவனுக்கு அநுபவத் தால் தோஷ திருஷ்டியுண்டாகிறது. ஆகவே தன் சரீரத்தை வியாதிகளுக்கு இடமாக்காமல் சுகமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்று அவனுக்குத் தெரியவருகிறது. அவ்விதம் சரீர சுகத்தில் முக்கியமாக விருப்பமிருப்பதுடன்

அதற்கு விகாதகமான ஆகாரப்பயித்தியத்தையும் ஒருவாறாக விலக்கிவிடுகிறான்.

இவ்வாறு தொழில் திறமை என்பதின் மூலமாய்ப் பொருளைச்சேர்ப்பதற்கு அவனுக்குக்கைராசி ஏற்படவே விஷய சுகத்திற்கும் ஜீவனத்திற்குமே பொருள் தேடுவது என்னும் கொள்கையைவிட்டு இனிப் பதினாயிரத்துக்கதிபதியாகிப் பிறகு லக்ஷப்பிரபுவாகி அதற்குமேல் கோடீசுவரனாகவேண்டுமென்று அளவில்லாத ஆசையைக் கைப்பற்றி அதற்குத்தக்க முயற்சியையும் செய்கிறான். அவனுக்குப்பொருள் கிடைக்கக் கிடைக்க அப்பொருளாசை மிகுதியாகிறதேயன்றிக் குறைவதைக்காணோம். ஆசைக்கிடமான பொருள் கைக்குக்கிட்டினால் அவ்வாசை அடங்கிவிடுமென்று சிலர் நினைப்பது தவறு. அது நெருப்பை அவிப்பதற்குக் கட்டைகளையிட்டு நெய் பொழிவது போலாகுமேயன்றி வேறல்ல.

அவன் இவ்விதமாகவே தன் மண்டை மடிகிறவரையில் தொழில்திறமையென்ற தோப்பராப் போட்டுக்கொண்டு கண்டவர்களையேமாற்றிக் காசைபறித்துக் காலத்தைக்கழிக்கிறான். அவனுக்கு மரணமென்றால் மயிர்க்கூச்சனுண்டாகிறது. ஏனெனில் தான் தேகசிரமத்தையும் பாராமல் தேடிவைத்த பொருளையெல்லாம் புறம்பேவிட்டுப் போகவல்லவோ வேண்டியிருக்கிறது. ஆகவே அவன் உயிரை விடுவதற்கு உடன்படுகிறதில்லை. அவனுக்கோ தன் மரணத்தைத்தானே தடுக்கச்சக்தியுமில்லை. ஆதலால் உலகநியதிப்பிரகாரம் ஒருநாள் அவனுக்கு உடலை விட்டு உயிரும் நீங்குகிறது.

அவன் இப்பூமியில் மறுபடி ஒரு தாய்வயிற்றில் பிறக்க வரும்போது தனக்குள் பணத்தாசையை முன்ஜன்மத்திலிருந்ததற்குப் பலமடங்கு அதிகமாக்கிக் கொண்டுவருகிறான். இந்தத் தடவையிலும் தான் மற்றவர்களுடன் பழகும்போது முன்போலத் தொழில்திறமை முறையிலேயே பழகத்தலைப்படுகிறான். ஆனால் அவன் திறமை அவனுக்கு முன்போலச் செல்லுகிறதுமில்லை. எங்குபோனாலும் அவன் எடுத்துக்கொண்டகாரியம்

இடர்ப்படுகிறது. தான் எங்குச்சென்றாலும் நஷ்டங்களும் பரிபவங்களும் தன்னிழல்போலத் தன்னைத் தொடர்ந்துவருகின்றன. உலக நியதி ஒருபோதும் மாறுபடாது. அது செய்யும் காரியத்தில் ஒரு குற்றத்தையும் யாரும் எடுத்துக்காட்டுவதற்கில்லை. பூர்வஜன்மங்களில் தொழில் திறமையுள்ளவன் என்று பிரபலமாகப் பெயர்பெற்றுப் பிறரிடம் அநியாயமாய்ப் பணத்தைப் பறித்துக்கொண்டபாவம் மற்றவர்களுக்கு அந்தப்பணத்தை அரைக்காசுகூடக் குறையாமல் கொடுத்துத் தீர்த்தாலொழியத் தன்னை விட்டுநீங்குமா? நீங்காதாகவே தன் கடனைத் தீர்க்குமளவிலும் நஷ்டத்திற்கும் கஷ்ட நிஷ்டுரங்களுக்கும் உடன்படவேண்டியிருக்கிறது.

இப்படிப் பலபல ஜன்மங்களில் கண்ணியமாய்ப் பிறரை ஏமாற்றிக் காசுபறித்துக்கொண்டும் தன் வசமில்லாமல் கருமக்கடனைத் தொலைத்துக்கொண்டுமிருந்து காலக்கிரமத்தில் உலகத்தினிடத்தும் செல்வப் பொருளினிடத்தும் விசேஷ வெறுப்பை அடைகிறான். இப்போது அவன் உலகவாழ்க்கையில் இன்னம் சில படிகளுக்குமேல் வந்துவிட்டானென்று சொல்லவேண்டும்.

4. இந்த நிலைமையில் ஒருவனுடைய உத்தேசம் வேறொரு தினுசாக மாறிவிடுகிறது. இனி உலகத்திற்காணும் பொருள்களும் அவற்றினாலுண்டாகும் விஷயாநந்தங்களும் அவன் சித்தத்தை ஆகர்ஷிக்கிறதில்லை. அதாவது அவனுக்கு வைராக்கியம் உதயமாகியிருக்கிறது. அற்பசுகத்தையே கொடுக்கிற பொருள்களை அவன் முற்றிலும் விட்டுவிலகியிருக்க வழிதேடுகிறான். அவன் மனது முக்தியையே நாடிநிற்கிறது. ஜனன மரணரூபமான ஸம்சாரச் சுழலில் அகப்படாதிருக்க வேண்டுமென்று அவன் உள்ளூரக்கனிந்துருகுகிறான். அவனுக்கு அதைத் தவிரவேறு விருப்பமொன்றுமிருக்கிறதில்லை. அந்த விருப்பத்திற்கு விரோதமாக எது எதிர்ப்பட்டாலும் அதை அவனுக்குப் பார்க்கவும்பிடிக்கிறதில்லை. அவனுக்கு நிலங்களும் மணங்காசுகளும் ஆடை ஆபரணங்களும் இவைபோன்ற எல்லா இந்திரிய விஷயங்களும் உலகத்தில் தன்னைப் பந்தப்

படுத்துகிற கருவிகளாகத் தோன்றுகின்றன. இப்படி அவைகளிடத்தில் தோஷதிருஷ்டியுண்டாகவே அவன் அவைகளை விட்டு ஓடப்பார்க்கிறான். ஸம்ஸாரவலைக்குள் சிக்காதிருக்க ஒரு விவிக்தமான இடத்தை நாடிச்சென்று அங்கேயே இருந்து தன் காலத்தைக் கழிக்கிறான்; அல்லது தக்ஷணமே தனக்கு முக்திவழியைக் காட்டக்கூடிய மஹாத்துமா ஒருவர் அகப்படாராவென்று வனவனாந்திரங்களில் எங்கிலும் ஏங்கித் திரிகிறான். ஸம்ஸாரபந்தம் பலமாயிருந்து குடும்ப விஷயத்தில் பாடுபடவேண்டியிருக்கும் போதும் அவன் ஏதேனும் வேதாந்தக்கிரந்தங்களை வைத்துப் படித்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் ஸம்ஸாரபந்தத்தைவிட்டு ஜீவன் முக்திதசையை அடையலாமென்று உத்தேசிக்கிறான். யோகத்தின் மூலமாக நிர்வாணபதவியை ஒருவன் அடையலாகுமென்று ஏதாவதொரு புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கக்கண்டால் அந்த சுலபமான மார்க்கத்தை உபதேசிக்க யாராகிலும் யோகிகளாவது சந்நியாசிகளாவது வரமாட்டார்களாவென்று எதிர்பார்க்கிறான். காஷாய வஸ்திரம் பூண்டும் தண்டுகமண்டலங்களைக் கைக்கொண்டும் ஒரு சந்நியாசி வரக்கண்டாலும், காவியுடுப்புத் தரித்தும் தாடிமீசைகளை வளர்த்தும் யோகதண்டத்தைப் பிடித்தும் ஒரு யோகீசுவரர் தனக்கெதிர்ப்பட்டாலும், அவர்களைத் தனக்குக் குருநாதரெனக் கொண்டாடித் தண்டனிடுகிறான். குருநாதரது அநுக்கிரகத்தினால் தான் தனக்கு மோக்ஷாநந்தம் கிடைக்குமென்று அவன் உறுதியாக எண்ணுகிறானேயன்றி அதற்குத்தக்க யோக்கியதையைத் தானே தேடிக்கொள்ள வேண்டுமென்று மனதில் கொள்ளுகிறதில்லை. இவ்வாறு இந்த ஜன்மத்திலும் அடுத்தடுத்து வருகிற பல ஜன்மங்களிலும் எதிர்ப்பட்டவர்களிடத்திலெல்லாம் கண்ட கண்ட உபதேசங்களை ஏற்றுப்பார்த்தும் தான் விரும்பிய மோக்ஷாநந்தம் தனக்குக் கிட்டாமல் போகவே அம்மோக்ஷாநந்தம் இலகுவில் கிடைப்பதல்லவென்று அவன் கடைசியில் தன் பூர்வ அநுபவங்களால் தெரிந்துகொள்ளுகிறான்.

5. மோக்ஷாதிகாரியாகத் தன்னைச்செய்து கொள்வதற்

குத் தகுந்த யோக்கியதையைத் தானே பிரயாசப்பட்டுத் தேடிக்கொண்டாலொழிய உண்மையான மஹாத்துமாக்களுக்கும் தன்னை உருப்படியாக்க முடியாதிருக்க உலகத்தில் சாதுக்களென்றும் சந்நியாசிகளென்றும் யோகீசுவரர்கள் என்றும் பெயரை வைத்துக்கொண்டு திரியுமவர்களுக்கா முடியப்போகிறதென்று இப்போது அவன் கண்டுகொள்ளுகிறான். அவர்கள் செய்யும் உதவிக்கு அவன் தகுந்த பாத்திரமாயிருந்தாலன்றி அவர்கள் அவனுக்கு ஒன்றுமே செய்து உதவமாளுகிறதில்லை. ஜில்லாஜட்ஜி உத்தியோகத்திலிருப்பவர் ஒருவர் கவர்ண்மெண்டார் இட்டசட்டத்திற்கு விரோதமாக ஒரு தீர்ப்புச் செய்ய உண்மையாகவே உடன்படமாட்டாரல்லவா? அதுபோலவே அம்மஹாத்துமாக்களும் உலகத்திற்குரிய கருமநியமத்துக்கு மாறுபாடாக ஒரு காரியத்தையும் செய்யத்துணிவதில்லை. இவ்விதமான அறிவு அவனுக்குத் தானாக வரவே அவனுடைய நிலைமையும் உத்தேசமும் முற்றிலும் மாறிவிடுகிறது. இப்போது அவனுக்கு இருக்கும் அபிநிவேசமெல்லாம் தன்னை மோக்ஷத்துக்குத் தகுந்த அதிகாரியாக்கிக்கொள்ளவேண்டுமென்பதிலேயே இருக்கிறது. உலகநீதி உறுதிப்பாடு உடையதென்றும் பாரபக்ஷமற்றதென்றும் அது ஒன்றிக்கே உலகமெல்லாம் கட்டுப்பட்டிருக்கிறதென்றும் இவன் தீரத்தெளியத் தெரிந்துகொண்டிருக்கிறானல்லவா? இப்போது அவன் நியாயவழியைக் கண்டுவிட்டான். தொழில் திறமை பொய்வஞ்சனை கொலை களவு முதலியவைகள் தானுத்தேசித்ததைப் பெறுவதற்கு அநியாயமான உபாயங்களென்றும் அவைகள் தன்னை மோக்ஷத்திற்குப் பாத்திரமாக வொட்டாதவைகள் என்றும் அவைகளைத் தீமையின் ஜாப்தாவில் சேர்க்கவேண்டுமென்றும் அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவைகளைத்தனக்கு ஹிதமாக எண்ணினதற்கெல்லாம் ஹீனமான பொருள்களிலும் அளவில்லாத ஆசையை அவன் கொண்டதே காரணமாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

பண்டிதர். S. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.